1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஜுவலர்க் கடைக்காரர்களிடம் அவர்கள் ஏமாறுமல் இருக்க வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, கதர்த் துணி விற்பனையாகாமல் 1973-ஆம் ஆண்டில் எவ்வளவு ஸ்டாக் இருந்தது? அது சம்பந்தமாக ஏதாவது ரிபேட் கொடுத்து, தவனைப்படி செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா, சென்ற வருஷம்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இது காதி கிராப்ட் மூலமாகத்தான் எவ்வளவு என்று இருக்கிறது. அதற்குரிய பதில்தான் என்னிடத்தில் இருக்கிறது. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் பனைவெல்லக் கூட்டுறவு சங்கம்.

*145 **வின. திரு. எம். முத்தையா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திக்குளம் பனைமரத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 25—2—1975-ல் புதிய பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது சம்பந்தமாக மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இந்த மனு தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத் தலைமை அலுவலகத்தில் பெறப்பட்டது.

(இ) சங்கத்தை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி தூத்துக்குடி பனைத்தொழில் தனி அலுவலரை, வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்க மையம், ஃபெடரேஷன் இப்பொழுது கலைக்கப்பட்டு விட்டது. அதனால் இம்மாதிரி அமைக்கப்பட்ட சங்கத்திற்கு நிதி உதவி

[திரு. சோ. அழகர்சாமி] [1975 அக்டோபர் 30

வேண்டுமென்றால் அந்த ஃபெடரேஷனிலிருந்து வாங்க முடியாமல் இருப்பதால் நேரடியாக இங்கிருந்து நிதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அரசு அதனுடைய கொள்கைப்படி இடைக்காலத்தில், இரண்டாண்டுக் காலம் மதுவிலக்கு தளர்த்தப்பட்ட காரணத்தால் இந்த ஃபெடரேஷன் தேவையில்லை என்று கலைக்கப்பட்டது. மீண்டும் தற்பொழுது அந்தக் கூட்டுறவு சம்மேளனங்கள் தேவை என்று கருதப்படுவதால் மீண்டும் அவைகளையெல்லாம் அமைப்பது என்ற முடிவெடுத்து, சமீபத்தில், இன்னும் ஒருவார காலத்தில் அந்த சம்மேளனம் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

அடுத்து கவன ஈர்ப்பு

திரு. கே. டி. கே. தங்கமணி: அட்ஜர்ன்மெண்ட் மோஷன்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(2) கவன ஈர்ப்பு.

நெல் கொள்முதல் குறித்து அரசால் அறிவிக்கப்பட்ட புதிய கொள்கை குறித்து.

THIRU K. T. K. TANGAMANI: Sir, I wish to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the new policy for procurement of

1975 அக்டோபர் 30] [Thiru K. T. K. Tangamani]

paddy announced by the Government making a distinction between Thanjavur district and other districts and the consequent confusion as there is no take-over of the marketable surplus.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறுவையின்போது சட்டபூர்வமான லெவி முறையின் கீழ் கொள்முதல் செய்யாமல் வெளிச்சந்தையில் விவசாயிகளிடமிருந்து உபரி நெல் முழுவதையும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் சட்ட பூர்வமான லெவி கொள்முதல் முறை பின்பற்றப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் குறுவையின்போது நாம் எந்த ஆண்டிலும் லெவி கொள்முதல் முறையைப் பின்பற்றியது கிடையாது. ஆகவே, இந்த ஆண்டு நாம் செய்துள்ளது புதியது ஒன்றும் அல்ல. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 4½ லட்சம் ஏக்கராக்களில் குறுவை பயிர் செய்யப்பட்டுள்ளது. தஞ்சையைத் தவிர, மாநிலத்தில் மற்ற மாவட்டங்களில் அனைத்திலும் சேர்த்து ஏறத்தாழ 62 லட்சம் ஏக்கராக்களில் குறுவை பயிர் செய்யப்பட்டுள்ளது. மேலும், தஞ்சை மாவட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் குறுவை பயிர் செய்யப் பட்டுள்ளது. ஆகவே, மாவட்டத்தை ஒரு தொகுதியாக பாவித்து, மாவட்டத்திலிருந்து நெல் வெளியே எடுத்துச் செல்லப்படுவதைத் தடை செய்து உபரி நெல் முழுவதையும் அரசு வாங்கிக்கொள்ளவும் சாத்தியமாகின்றது. இந்த முறையை மற்ற மாவட்டங்களில் பின்பற்ற இயலாது.

மேலும், மற்ற மாவட்டங்களைப் போலல்லாமல், தஞ்சையில் குறுவை நெல்லை விவசாயிகள் வழக்கமாகத் தங்கள் சொந்தத் தேவைகளுக்கு வைத்துக்கொள்ளாமல் விற்றுவிடுவதுதான் வழக்கம். அவ்வாறு அவர்கள் விற்க விரும்பும் நெல்லை, தனியார் மொத்த வியாபாரிகள் யாரும் வாங்கிக்கொள்ளாமல், அரசு நிறுவனங்களே வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாம் கொள்முதலைத் திறமையாக நடத்துவதற்கும், தஞ்சை விவசாயிகளுக்கு எந்தவிதச் சிரமமுமின்றி அவர்கள் உபரி

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 30

நெல்லை அரசு வாங்கிக்கொள்வதற்கும் இதுதான் சிறந்த முறை என்று கருதப்படுகிறது. தஞ்சையில் இதுவரை 50,000 டன் களுக்குமேல் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு—இன்றைய நிலவரப்படி ஒரு இலட்சத்திற்கு மேல் வந்துள்ளது—மேலும் கொள்முதல் திருப்திகரமாக நடந்து வருகிறது. இந்த முறையினல் எவ்விதக் குழப்பமும் இல்லை. தஞ்சை விவசாயி களும் பொதுவாக இதை வரவேற்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது.

(முற்பகல் 10-00)

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஆண்டு குறுவை அறுவடையில் எவ்வளவு நெல் கொள்முதல் பண்ணுவது என்று அரசாங்கத்தில் திட்டம் உண்டா? அப்படிக் கொள்முதல் செய்வதில் தஞ்சை மாவட்டத்திற்கு எவ்வளவு? மற்ற மாவட்டங் களுக்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுமார் 3 லட்சம் டன் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பகுதி தஞ்சை மாவட்டத்திலிருந்து வரும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தக் கொள்முதல் செய்கின்ற அளவைக் குறைத்ததாகப் பத்திரிகையில் அறிவிப்பு வந்ததே—அது உண்மையா? குறைப்பது என்ற நிலைமையில் மாறுதல் உண்டா? தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யக் கூடிய நெல்லை ஸ்டாக் பண்ண போதுமான கோடவுன்கள் இல்லையென்று சொல்லப்படுகிறதே. அந்த நிலையில் நெல்லை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு கோடவுன்கள் வசதி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல்லைப் பொறுத்தவரை எப்போதுமே அங்கே வைப்பதில்லை. உடனுக்குடன் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு விடுகிறது. இப்போது மழை பெய்த காரணத் தால் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது 500 லாரிகள் மூலமாகவும், ரயில்வே துறை மூலமாகவும் எல்லா மாவட்டங்

1975 அக்டோபர் 30] [திரு. செ. மாதவன்]

களுக்கும் நெல்லை அனுப்பும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் சொல்லப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் குறுவை நெல்லை அவர்களுடைய அதிகாரிகளே தஞ்சை மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று உடனுக்குடன் நெல்லை எடுத்துச் சென்று அவர்களுடைய மாவட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குரிய லாரிகளுக்கு அவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். விரைவாயக் கொள்முதல் நடைபெற்று வருகிறது.

(3) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி--உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/75), 27—10--1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், 27--10---1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தம் ஏதுமின்றி ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/75).